மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: **திரு.T.கோகுலகிருஷ்ணன் B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
**2022**ம் வருடம் **நவம்பர்** மாதம் **09**ம் நாள் **புதன்**கிழமை
**சுபகிருது** ஆண்டு **ஐப்பசி** மாதம் **23**ம் நாள்

CNR No. TNMD19000003 -2020
**I.A.No. 492/2022**
**in**
**IA.No. 137/2020**
**in**
**O.S No. 06/2020**

1. மலைச்சாமி
2. ராக்கு
3. ராமு
4. முத்துலட்சுமி
5. சுந்தர்
6. மீனா
7. வினோத்
8. ஆர்த்தி

... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

போஸ் தலைமை நிர்வாகி (ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் தலைமை நிர்வாகி)

.... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு **22.08.2022ம்** தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M. **வெங்கடேசன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு**.K. ராமநாதன்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **27.10.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை I.A.No. 137/2020 in OS.No. 06/2020 மனுவில் தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி கட்டளை 8 விதி 1A மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார் என்றும், மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைக்கால மனு எண். IA.No. 137/2020 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதில், மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, மனுவில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட வேண்டிய நிலையில், மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மனு சொத்தில் கட்டுப்பட்ட வீடுகளுக்கு வெள்ளையடிக்கும்போது கைதவறுதலாக வேறு இடத்தில் வைக்கப்பட்டதை தற்போது தான் கண்டுபிடிக்கப்பட்டதாலும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யக்கூடிய அவசியமான ஆவணங்கள் என்றும், இம்மனுவினை அனுமதிப்பதற்கு எதிர்மனுதாரர்/வாதி தரப்பிற்கு நியாயமான ஆட்சேபணை இருக்கப்போவதில்லை என்றும், எனவே மனுவில் குறிப்பிட்ட ஆவணங்களை மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக IA.No. 137/2020 in OS.No. 06/2020-ல் குறியீடு செய்வதற்கு அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பு எதிர் மனு உரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் அசல் மனுவில் எதிர்மனுதாரர் ஆவார் என்றும், அசல் வழக்கில் வாதியாவார் என்றும், எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட I.A.No.137/2020-ல் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிலும், மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பிலும் ஏற்கனவே வாதங்கள் செய்யப்பட்டு உத்தரவுக்காக உள்ள நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாவா வழக்கை தள்ளுபடி செய்ய I.A.No.644/2020 மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவும் கடந்த 08.03.2021 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காக அசல் வழக்கில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய இடைக்கால மனு எண் 827/2021 மனு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வரும் நிலையில், அசல் வழக்கை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், தாவா சொத்து அமைந்துள்ள இடத்தை சுற்றி உள்ள காலியிடமானது, அரசுக்கு பாத்தியப்பட்ட கிராம நத்தம் புறம்போக்கு இடம் என்பதால், மேற்படி இடத்தில் வீடு ஏதும் கிடையாது என்றும், தாவா சொத்தை ஒட்டி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சர்வே எண்ணில் குடியிருப்பதை காட்டக்கூடிய ஆவணம் ஏதும் இல்லை என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா இடத்திற்கு சம்பந்தம் இல்லாத மற்றொரு பகுதியில் வசித்து வரும் வீட்டின் ஆவணங்களை தாவா

புல எண்ணிற்கு ஆவணமாக பயன்படுத்தி நீதிமன்றத்தை நம்ப வைக்கும் முயற்சியில் ஈடுபட முயற்சி செய்வதால், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், தாவா சொத்தில் ஒரு பகுதியில் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு காலியிடம் இருப்பதை அபகரிப்பதற்காக மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் எதிர்வாதம் செய்யப்படுகிறது என்றும், அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கில் வீடற்ற நபர்களுக்கு அதிகபட்சமாக 2 செண்டு நிலம் மட்டுமே அனுபவம் செய்ய முடியும் என்றும், ஆனால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சுமார் 3450 சதுரடி காலிமனையிடத்தை அனுபவம் செய்வதாக கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், தாவா சொத்து உள்ள சர்வே எண்ணில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வீடு இருப்பது போன்று பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால், மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனு அபிடவிட் மற்றும் எதிர்மனு உரை இந்த நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக,

இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

**4**) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகளும் மற்றும் வழக்கு கோப்புகளும் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5) இம்மனுவின் அசல் மனுவில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வரும் நிலையில், மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கட்டளை 8 விதி 1 (A) உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவின் அசல் வழக்கானது மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி அசல் வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இ.ம.எண். 137/2020ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் மனுவான இ.ம.எண். 137/2020-ல் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில்

வாதுரை முடிக்கப்பட்டதற்கு பின்னிட்டு, இந்த மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வாதுரைக்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவதிகளால் வாதுரையில் வணங்கள் குறியீடு செய்திட அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் இ.ம.எண். 137/2020-ல் மனுவில் ஆவணங்கள் குறியீடு செய்திட அனுமதி கோரப்பட்ட மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

8) எதிர்மனுதாரர்/மனுதாரர்கள்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுஉரையை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி, எதிர்மனு உரையில் குறியீடு செய்யக்கூடிய ஆவணங்கள் குறித்து ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

9) மேற்படி குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களினால், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு எவ்வகையிலும் பாதகமாக ஏற்படாது என்பதாலும், மேலும், குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களின் உண்மைத்தன்மையை இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியால் குறுக்கு விசாரணையின் மூலம் பரிசோதனை செய்து கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதினாலும், அசல் வழக்கின் தன்மைக்கருதியும், நீதியின் நலன்கருதியும் இம்மனு அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**1) மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை
**2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்**கள்: இல்லை.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//